ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1922 - 2015 ජූලි මස 03 වැනි සිකුරාදා - 2015.07.03

*1922 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 984 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூலை மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண அரசாங்க சேவையின் சிறு கைத்தொழில் திணைக்களத்தில் சிறு கைத்தொழில் ஆலோசகர் (ஆண்/பெண்) (தரம் III) பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

வடமேல் மாகாண அரசாங்க சேவையின் சிறு கைத்தொழில் திணைக்களத்தின் சிறு கைத்தொழில் ஆலோசகர் (ஆண்/பெண்) (தரம் III) பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தகைமை பெற்ற வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இலங்கையரான ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

திறந்த போட்டிப் பரீட்சை மூலம் இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| தச்சுக் கைத்தொழில் ஆலோசகர் | 5 |
| தும்புக் கைத்தொழில் ஆலோசகர் | 5 |
| மட்பாண்டக் கைத்தொழில் ஆலோசகர் | 1 |

1. இப்பரீட்சை வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் குருநாகல் நகரத்தில் நிறுவப்படும் பரீட்சை மத்திய நிலையங்களில் நடாத்தப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சையைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

**2. சம்பள முறைமை.-**

2.1 பொது நிர்வாக சுற்று நிருபம் 06/2006 (iv) இல் MN 1/2006 A க்கு ஏற்ப இப்பதவிக்குரிய மாதாந்த சம்பளத் திட்டம் ரூபா 13,120-10×145-11×170-10 × 240 - 10 × 320 - ரூபா 22,040 ஆகும்.

**குறிப்பு I**

(அ) இந்த சம்பள முறைமை அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டதாகும். இந்நியமனம் 3 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். இப்பதவிக்கு இணைத்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளல் மற்றும் உயர்வு வழங்கல் செய்முறை ஒழுங்கில் குறிப்பிடப்பட்டவாறு III ஆந் தரத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 3 வருடங்களினுள் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். II ஆந் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு 3 வருடங்களினுள் இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். I ஆந் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு 5 வருடங்களினுள் மூன்றாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(ஆ) பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 01/ 2014 க்கு ஏற்ப மற்றும் அதற்கு இடைத்தேர்வான சுற்றுநிருபங்களுக்கு ஏற்ப பதவியில் இணைந்து 5 வருடங்களினுள் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2.2 **வயதெல்லை.-** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வருடங்களுக்குக் குயைாமலும் 35 வருடங்களை விடக் கூடாமலும் இருக்க வேண்டும். தற்போது அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது. அவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை திணைக்களத் தலைவர் ஊடாக முன்வைக்க வேண்டும்.

**2.3 சேவை நிபந்தனைகள்.-**

(i) இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்துக்குரியது தெரிவு செய்யப்படும். விண்ணப்பதாரிகள் விதவை/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்.

(ii) தாபன விதிக் கோவையில் II ஆவது அத்தியாயத்தின் 10 முதல் 12 ஆவது உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளும் இப்பதவிக்கு உரித்துடையவையாகும்.

(iii) அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தினுள் குறிக்கப்படும் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

(iv) இப்பதவிக்காக தெரிவு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் பிரமாணங்களுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்கள ஆணைகளுக்கும், வடமேல் மாகாண ஒழுக்காற்று செய்முறைக் கோவைக்கும், மாகாண நிதிச் சட்டக் கோவைக்கும், வடமேல் மாகாண சிறு கைத்தொழில் ஆலோசகர் (ஆண்/பெண்) இணைத்துக்கொள்ளுதல் மற்றும் பதவியுர்த்தல் செய்முறை ஒழுங்கிற்கும், அரசு மற்றும் வடமேல் மாகாண சபை என்பவற்றினால் வெளியிடப்பட்டுள்ள மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் ஏனைய பிரமாணங்கள் மற்றும் ஆணைகளுக்கும் உட்பட்டு செயற்படுவதற்கு கடமைப்பட்டிருத்தல் வேண்டும்.

**3. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்.-**

**3.1 கல்வித் தகைமைகள் :**

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு (2) பாடங்களில் திறமைச் சித்தியோடு இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். மற்றும்

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலாவது (பொது அறிவுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

3.2 **தொழிற் தகைமைகள்** :

(i) தச்சுக் கைத்தொழில் - அரச அல்லது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் இரண்டு ஆண்டுகள் தச்சுப் பயிற்சி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

(ii) தும்பு மற்றும் மட்பாண்டத் துறைகளுக்காக அரச அல்லது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 6 மாதங்களுக்குக் குறையாத பயிற்சிப் பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல்.

**கவனிக்க வேண்டியது**.- மேற்குறித்த அனைத்து கல்வி, தொழில் மற்றும் ஏனைய தகைமைகளை 2015.08.03 ஆந் திகதிக்கு முன்பு பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4. **ஏனைய தகைமைகள்** :

4.1 இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்;

4.2 போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முந்திய 3 வருடங்களுக்கு குறையாத காலம் வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். (கிராம அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றிதழ் மீது உரிய பிரதேச செயலாளரினால் கையொப்பமிட்டு வழங்கப்படும் சான்றிதழ் மூலம் நேர்முகப் பரீட்சையின் போது வதிவை உறுதிப்படுத்த வேண்டும்.);

4.3 சிறந்த நடத்தையையும், உடல் நலத்தையும் கொண்டிருக்க வேண்டும்;

4.4 பதவியில் இணைத்துக் கொள்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு அந்த தகைமைகள் அனைத்து வகையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

5. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை**.- வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் 2 மணித்தியாலங்களுடைய பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சைகளினதும், குறித்த தொழில் தொடர்பாக 2 மணித்தியாலங்கள் கோட்பாட்டு மற்றும் 3 மணித்தியாலங்கள் செய்முறைப் பரீட்சைகளினதும் பெறுபேறுகளுக்கு ஏற்ப அப்பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்வோர் தகைமையைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் பின்பு சிறு கைத்தொழில் ஆலோசகர் (ஆண்/பெண்) III ஆம் தரதிற்கு இணைத்துக்கொள்ளப்படுவர். (தச்சுக் கைத்தொழிலுக்காக தேசிய மட்டத்தில் இறுதிப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளமையால் அவர்களுக்கு விடய அறிவு மற்றும் செய்முறை அறிவைப் பரிட்சிப்பது அவசியமின்மையால் அவர்கள் பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.) சிறு கைத்தொழில் ஆலோசகர் (ஆண்/பெண்) III ஆம் தர வெற்றிடங்களில் 50% திறந்த போட்டிப் பரீட்சை மூலமும், 50% மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமும், அரச சேவையின் ஆரம்பத் தர ஊழியர்களை இணைத்துக் கொள்வதன் மூலமும் நிரப்பப்படும். வெற்றிடங்களை நிரப்பும்போது உள்ளக ஆட்சேர்ப்புக்கு போதியளவான விண்ணப்பதாரிகள் இல்லாவிடின் எஞ்சிய அனைத்து வெற்றிடங்களும் வெளி விண்ணப்பதாரிகள் மூலம் நிரப்பப்படும்.

6. **பரீட்சை முறைமை**.- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதோடு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்பு மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

**பாடங்கள்**

(i) பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை நேரம் - 2 மணித்தியாலங்கள்

இந்த வினாப்பத்திரம் இலங்கையின் சமூக, பொருளாதார, மதரீதியான மற்றும் கலாசார அம்சங்கள் உள்ளடங்கியவாறு விண்ணப்பதாரிகளின் பொது அறிவை இனம்காண்பதற்காகத் தயாரிக்கப்பட்டதாகும். (பொது அறிவு 50 புள்ளிகள், நுண்ணறிவுப் பரீட்சை 50 புள்ளிகள் மொத்தம் 100)

தும்பு மற்றும் மட்பாண்ட ஆலோசகர் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கென

(ii) **கோட்பாட்டுப் பரீட்சை**.-
தும்பு மற்றும் மட்பாண்ட பயிலுநர்களின் கோட்பாட்டு அறிவை அளவிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட 2 மணித்தியாலங்களுடைய எழுத்துப் பரீட்சையாகும். 100 புள்ளிகள்

**தும்புக் கைத்தொழில் தொடர்பான கோட்பாட்டு அறிவு** :

* தென்னம்மட்டைகளை அறிமுகப்படுத்தல்
* தும்பு தயாரித்தல், தும்பு வகைகளை இனம்காணுதல்
* கயிறு வகைகளைத் தயாரித்தல்
* பல்வேறுபட்ட தயாரிப்புக்களை இனம்காணுதல் (துடைப்பங்கள், விரிப்புக்கள், பாய்கள், வீட்டு உபகரணங்கள்)
* சாயங்கள் மற்றும் சாயமிடும் முறைகள் தொடர்பான அறிமுகம்
* இடைப்பின்னல் முறைகள் தொடர்பான அறிமுகம்
* விரிப்பு வகைகள் தொடர்பான அறிமுகம்

* பேஷன் வடிவமைப்பு
* அலங்கார முறைகளின் அறிமுகம்

***மட்பாண்டக் கைத்தொழில் தொடர்பான கோட்பாட்டு அறிவு :***

* களிமண்ணை அறிமுகப்படுத்தல்
* களிமண் தொடர்பான இரசாயனப் பகுப்பாய்வு
* களிமண் மற்றும் செரமிக் கலவைகளை அறிமுகப்படுத்தல்
* இயந்திர உபகரணங்கள் அறிமுகம்
* உற்பத்தி முறைகள் அறிமுகம்
* பல்வேறுபட்ட மட்பாண்டங்கள் தயாரிப்பு
* அலங்காரம்
* டிசைன் வரைதல்

(iii) ***செய்முறைப் பரீட்சை.-***
மேற்குறித்த (ii) இல் குறிப்பிடப்பட்ட பயிலுநர்கள் தாங்கள் பயின்றுள்ள துறைகளுக்கேற்ப வடிவமைப்பு அல்லது சில வடிவமைப்புக்களை முன்வைக்க வேண்டும்.

***தும்புக் கைத்தொழில் தொடர்பான செய்முறை அறிவு.-***

தும்புப் பிரிவில் மதிப்பீடுகளைத் தயாரித்தல், பேஷன் வடிவமைப்பு, தும்பு தயாரிப்பு, பொருட் தயாரிப்பு.

***மட்பாண்டக் கைத்தொழில் தொடர்பான செய்முறை அறிவு.-***

மட்பாண்டக் கைத்தொழிற் துறையின் உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை இனங்காணுதல், டிசைன் வரைதல், நிர்மாணம், சுடுதல், அலங்காரம்.

**கவனிக்கவும்.-** இணைத்துக் கொள்வதற்குத் தகைமை பெறுவது ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றால் மாத்திரமேயாகும்.

7. பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் 2003-02-13 ஆம் இலக்க வருமானத் தலைப்பில் வரவு வைக்கப்படுமாறு, தாம் நிரந்தரமாக வதியும் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட வ. மே. மா. ச. மு/2 பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுகள் தவிர ஏனைய பற்றுச்சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

8. **விண்ணப்பிக்கும் முறை.-**

8.1 இவ்வறிவித்தலின் கீழுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப, ஏ 4 அளவிலான (21×29செ.மீ.) அளவுள்ள கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இலக்கம் 1 முதல் 5 வரை முதற் பக்கத்திலும் 6 இலிருந்து உள்ள பந்திகள் ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்குமாறு விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் 2015.08.03 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக "செயலாளர், வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தாங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிறு கைத்தொழில் ஆலோசகர் (ஆண்/பெண்) III ஆம் தரத்திற்கு இணைத்துக்கொள்ளுதல் - 2015" என்று குறிப்பிட வேண்டும். (தற்போது அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர சேயையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.)

8.2 ***கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-*** இது அரச பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/இராணுவத்தில் அல்லது விமானப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது 2,40,360 ரூபாக்கு அதிகமான அடிப்படை வருடாந்த சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அரச/மாகாண அரச சேவை அதிகாரி ஆகிய எவரேனும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 2015.08.03 ஆகும்.

10. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு ஏற்புடையதாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டையொன்றை வழங்குவதானது விண்ணப்பதாரி இப்பதவிக்கு தகைமை பெற்றுள்ளார் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படக்கூடாது. விண்ணப்பதாரியை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து உரிய அறிவித்தலின்படி தகைமை பெற்றுள்ளாரா என்று பரீட்சிக்கும் போது தேவையான தகைமைகள் பெற்றில்லை என்பது தெரியவந்தால் அவரது நியமனம் பெறுவதற்கு உள்ள

உரிமை இரத்துச் செய்யப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் உரிய அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்பு பூரணப்படுத்தப்படுத்தியிருப்பது கட்டாயமானதாகும்.

11. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் தமது ஆளடையாளத்தை கீழுள்ள ஆவணமொன்று மூலம் பரீட்சை மேற்பார்வையாளருக்கு உறுதிப்படுத்த வேண்டும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**குறிப்பு**.-
பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியாத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தகுதியானவர்களாக கருதப்படமாட்டார்கள்.

12. யாராவது ஒரு விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை பரீட்சைக்கு குறைந்தது 7 நாட்களுக்கு முன்பு கிடைக்காவிட்டால் அது தொடர்பில் உடனடியாக "செயலாளர், வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலக கட்டடத் தொகுதி, குருநாகல் எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது பின்வரும் விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும்:-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி;
(இ) விண்ணப்பித்த முகவரி, பதிவிலக்கம், தபால் அலுவலகம் மற்றும் திகதி.

13. யாராவது ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என நியமனம் பெறுவதற்கு முன்பு எச்சந்தர்ப்பத்திலாவது அறியக் கிடைத்தால் பரீட்சார்த்தத்தன்மை இரத்துச் செய்யப்படும். நியமனம் பெற்ற பின்பு போலியான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்று அல்லது சரியான தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது என்று தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்குதல் அல்லது சேவையை முடிவுறுத்தல் மேற்கொள்ளப்படும்.

14. தற்போது கிடைக்கப்பெற்றுள்ள வெற்றிடங்கள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படும் வெற்றிடங்களை இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இருப்பின் அவர்களைக் கொண்டு நிரப்புதல் தொடர்பாக மற்றும் விண்ணப்பம் கோரல் அறிவித்தலுக்கு உரிய விடயங்கள் அல்லது அவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத வேறோர் விடயம் தொடர்பாக வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதாகும்.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

காந்தி வேஹெல்ல,
செயலாளர்,
வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

வடமேல் மாகாண சபை அலுவலகக் கட்டடத் தொகுதி,
குருநாகல்,
2015, யூன் 18.
தொலைபேசி இல. : 037-2233769

மாதிரி விண்ணப்பப்படிவம்

பரீட்சை எண் : [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

**வடமேல் மாகாண அரசாங்க சேவையின் சிறு கைத்தொழில் திணைக்களத்தில் சிறு கைத்தொழில் ஆலோசகர் (ஆண்/பெண்) (தரம் III) பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :------.
   1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :------.
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
   1.4 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
   1.5 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :- [ | | | | | | | | | ]

2. 2.1 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :----.

2.2 நிரந்தர முகவரி :----.

2.3 தொலைபேசி இலக்கம் :- தனிப்பட்ட :.................... அலுவலக :......................

3. பால் நிலை (உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக)

பெண் : ☐ ஆண் : ☐

4. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக)

சிங்களம் : ☐ தமிழ்: ☐ ஆங்கிலம் : ☐

5. பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

5.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2015.08.03 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் (விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 3.1 இன் கீழ்)

(அ) க. பொ. த. (சா.த.) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு, பரீட்சை சுட்டெண்-

முதல் அமர்வு : ஆண்டு :-----. இரண்டாவது அமர்வு : ஆண்டு :-----.

பரீட்சை சுட்டெண் :-----. பரீட்சை சுட்டெண் :-----.

| பாடம் | பெற்றுள்ள தரம் | | பாடம் | பெற்றுள்ள தரம் | |
|---|---|---|---|---|---|
| | முதல் அமர்வு | இரண்டாவது அமர்வு | | முதற் அமர்வு | இரண்டாவது அமர்வு |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

(ஆ) (i) க. பொ. த. (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு :-----.

(ii) பரீட்சை சுட்டெண் :-----.

| பாடம் | பெற்றுள்ள தரம் | பாடம் | பெற்றுள்ள தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

(ஆ) தொழிற் தகைமைகள் (அறிவித்தலின் இலக்கம் 3.2 இன் கீழ் பயின்றுள்ள பாடநெறிகள் தொடர்பாகத் தெளிவாகக் குறிப்பிடுக):- இத்தகவல்கள் தெளிவாகவும் சரியாகவும் குறிப்பிடப்படாவிட்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| நிறுவனம் | பயின்றுள்ள பாடநெறி | காலப் பகுதி | தரம் | சான்றிதழ் இலக்கம் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

07. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

திகதி :-----.

பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளர் அலுவலகம் :-----.

| பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும். |
|---|

8. ................ ஆகிய என்னால் இவ்விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும் மற்றும் சரியானவை என்றும் குறிப்பிடுகின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் போலியானவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் வடமேல் மாகாண சபையின் சிறுகைத்தொழில் ஆலோசகர் (ஆண்/பெண்) III ஆம் தரத்தில் பதவியொன்றுக்கு நியமிப்பதற்கான எனது உரிமையை கருத்திற் கொள்ளாமலிருப்பதற்கும், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்றும் நான் நன்றாக அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

(தேவையற்ற வசனங்களை வெட்டி விடுக.)

இவ்விண்ணப்பப் படிவத்தை முன்வைக்கும் ................................ திரு./திருமதி/செல்வி அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ள .......................... இலக்கத்தையுடைய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும், அவர் ................ ஆந் திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் பெயர் :-----.
கையொப்பம் :-----.
பதவி மற்றும் பதவி முத்திரை :-----.

(இது அரச பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/இராணுவத்தில் அல்லது விமானப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது 240,360 ரூபாவுக்கு அதிகமான அடிப்படை வருடாந்த சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அரச/மாகாண அரச சேவை அலுவலர் ஆகிய எவரேனும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சிபாரிசு:**

(தேவையற்ற வசனங்களை வெட்டி விடுக.)

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................. இத்திணைக்களத்தில் சேவையாற்றுபவர் என்றும். அவர் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கிறார் என்றும், இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கு ஏற்ப நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படின் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவார் என்றும், அவரது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்தில் உள்ள ஆவணங்களோடு சரிபார்க்கப்பட்டுள்ளது என்றும், இப்பரீட்சைக்குரிய பரீட்சை அறிவித்தலில் காணப்படும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதி பெற்றுள்ளார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையை வைக்கவும்)

7-246

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2015***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 03.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.06.2015 |
| | | வெள்ளி | 10.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.06.2015 |
| | | வெள்ளி | 17.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.07.2015 |
| | | வெள்ளி | 24.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.07.2015 |
| | | வியாழன் | 30.07.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.07.2015 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 07.08.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.07.2015 |
| | | வெள்ளி | 14.08.2015 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.07.2015 |
| | | வெள்ளி | 21.08.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.08.2015 |
| | | வெள்ளி | 28.08.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.08.2015 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 04.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2015 |
| | | வெள்ளி | 11.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2015 |
| | | வெள்ளி | 18.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.09.2015 |
| | | வெள்ளி | 25.09.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2015 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*